

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், எப்போதும் வென்றான் அரசு உயர்நிலைப்பள்ளியில் அகஸ்தான் நிட்வேர் குழுமம் சமூகப்பொறுப்பு நிதியின் கீழ் ரூ.15லட்சம் மதிப்பீட்டில் அம்பாள் கல்வி அறக்கட்டளையின் மேற்பார்வையில் புதுப்பிக்கப்பட்டுள்ள வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் சுகாதார வளாக கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் கனி, ஒன்றிய செயலாளர்கள் காசிவிஸ்வநாதன், ராமசுப்பு, எப்போதும்வென்றான் சோலைசாமி, வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு - புதுச்சேரி மாநில, தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# மாவட்ட, மாநகர நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

*கிருஷ்ணகிரி, மார்ச் 4 -*

அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தலைமைக்கழக ஆணைப்படி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் தமிழ்நாடு, புதுவை மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவசரக் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற 06.03.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஈரோடு மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் Ex.MLA தலைமையிலும், மாநில துணை செயலாளர்கள் Dr.V. முத்து ராஜன்; MLA, K.தினகரன் Ex.MLA, Dr. RCM.விஷ்ணு பிரபு, M.சிவராஜ், A.K. பூபதி, C.செல்லதுரை, S.ராம்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

அது சமயம் வீட்டுவசதி துறை அமைச்சரும் ஈரோடு மேற்கு மாவட்ட கழக செயலாளருமான சு.முத்துசாமி அவர்களும், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், மத்திய மாவட் டக் கழக செயலாளர் என். டி.தோப்பு வெங்கடாச்சலம்★ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

ஆகவே தமிழ்நாடு, புதுச்சேரி மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் மற்றும் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தேர்தல் நேரம் என்பதால் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: மார்ச் 9 திருச்சியில் முதல்வர் 10 இலட்சம் கழக நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு குறித்து

2026 சட்டமன்ற தேர்தல் குறித்து

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் - முதல்வர் பிறந்த நாள் விழா!

# வழக்கறிஞர் அணி சார்பில் அன்னை தெரேசா இல்லத்தில் நல உதவிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, மார்ச் 4 -

செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வழக்கறிஞர் அணி சார்பில்விழுப்புரம் வடக்கு மாவட் டச் செயலாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏகலந்துகொண்டு அன்னை தெரேசா ஆதரவற்ற முதியவர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும்,இளம் வழக்கறிஞர்களுக்குசட்டப் புத்தகம் மற்றும் இனிப்பு வழங்கினார்.

தி.மு.க. தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் 73 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் அணி சார்பில் அன்னை தெரேசா ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் வசிக்கும் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இளம் வழக்கறிஞர்களுக்கு பயிற்சி சட்டப் புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அரசு வழக்கறிஞர் கிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் , மாநில பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான்எம் எல் ஏ கலந்து கொண்டு ஆதரவற்ற முதியோர் இல்லத்திற்கு நலத்திட்ட உதவிகளையும் ,இளம் வழக்கறிஞர்களுக்கு பயிற்சி சட்ட புத்தகத்தை வழங்கி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில்மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பார் அசோசியேசன் சங்கத் தலைவர் பிரவீன், சங்க செயலாளர் அசாருதீன், அரசு வழக்கறிஞர் தமிழ் செல்வி கர்ணன்,,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சுதாகரன், மூத்த வழக்கறிஞர்கள் அரிகிருஷ்ணன், மழை மேனி பாண்டியன்,முருகன் மணிகண்டன், வீரப்பாண்டியன், ஜெயக்குமார், நந்தினி, பத்மா, கலை, உத்தரவேலு, ராஜா, ர.,அரவிந்தராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## ஈ.ராஜா எம்.எல்.ஏ. - முன்னணியினர் பங்கேற்பு!

தென்காசி, மார்ச் 4 –

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் கோ.சுப்பையா தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் யூ.எஸ்டி.சீனிவாசன்,பரமகுரு,மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பகவிநாயகம், மாவட்ட பொருளாளர் இல.சரவணன், மாவட்ட துணை செயலாளர் மனோகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நகர செயலாளர் மு.பிரகாஷ் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.பங்கேற்று பல்வேறு ஆலோசனை வழங்கியும், உரையாற்றினார். இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானம் வருமாறு. தென்காசிக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க விரைவில் வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட எல்லையில் உற்சாகமான சிறப்பான வரவேற்பு கொடுக்க வேண்டும் என்றும், குருவிகுளம் கிழக்கு ஒன்றிய பகுதியில் பிரம்மாண்ட கொடி கம்பம் நிறுவி அதில் கொடியேற்றுவது என்றும்,இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்படுகிறது. மார்ச் 9ஆம் தேதி தமிழ்நாடு அளவில் திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் களப்பணியாளர்கள் பங்கேற்கும் பிரம்மாண்டமான மாநாட்டில் ஒன்றிய, நகர,பேரூர்,கழக நிர்வாகிகள் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், பாக முகவர்களை பங்கெடுக்க வைத்து சிறப்பு செய்வது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி என்ற இலக்கினை செயல்படுத்தும் விதமாக மாவட்ட கழகம் சார்பாக ஒன்றிய, நகர,பேரூர், கழக நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலை வாக்குச்சாவடி வாரியாக சரிபார்த்தல் மற்றும் நமது ஆதரவு வாக்கு சம்பந்தமான வரைவு பட்டியலை எடுக்கும் விதமாக குறிப்பெடுக்கும் பணிகளை அதி தீவிரமாக கிளைக் கழகச் செயலாளர்கள் பாகம் முகவர்கள் செய்ய வேண்டும் என்றும். சங்கரன்கோவில் மற்றும் வாசகம் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கு தீவிர பணி யாற்றுவது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிகழ்வில் வேல்சாமி பாண்டியன், லாலாசங்கர பாண்டியன், அந்தோணிசாமி,நாகூர் கனி, குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன், மாரிமுத்து, சேது சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப.சீ. கிருஷ்ணசாமி

**மார்ச் 4 (2001)**



பெரியார் மாவட்டக் கழக பொறுப்பாளர்களில் ஒருவராகவும், பவானி நகரக் கழக செயலாளராகவும் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவராகவும், நகர வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“உயிர் கொள்கைக்கு உடல் மண்ணிற்கு என்று நீ கொண்டிருந்த உறுதியும், எதற்கும் கலங்காத உன் உள்ளமும் என் நினைவிலிருந்து என்றைக்கும் மறையாது!” எனத் தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மதுரை என்றாலே மனிதநேயம்,மதநல்லிணக்கம் என்பதை மீண்டும் உறுதி செய்தது!

## ரமலான் நோன்புக்கு உதவிகள் வழங்கிய மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் மீனா அன்புநிதி பேச்சு!



மதுரை, மார்ச் 4 -

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் மீனா அன்புநிதி பேசியதாவது:

மதுரையை ஆண்ட மன்னர்கள் தொடங்கி இடையில் வந்த வெள்ளையர்கள் கடந்து தற்போது மக்கள் நலம் பேணி ஆளுகின்ற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சி வரை மதச் சார்பற்ற ஒரு நிகழ்வை அரங்கேற்றிக் கொண்டிருப்பது தான் மதுரை மண்ணுக்கான தனிச்சிறப்பாக திகழ்கிறது.

அவர் மதுரையின் சங்க கால பாண்டியர்கள் நாயக்கர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள் பெண் அரசிகள் 200 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்து ஆங்கிலேயர்கள் என அரசுடைமை ஏற்றவர்கள் அனைவரும் சமத்துவம் போற்றுகின்ற விழாக்களை கொண்டாடியது தான் மதுரை மண்ணின் மாபெரும் வரலாறாக இருக்கிறது. அதிலும் விழாக்களின் தலைநகரமான மதுரையில் மும்மதமும் வாழ்த்தி கொண்டாடுகின்ற விழாக்களை சிறப்பு சேர்க்கிற வகையில் ரமலான் திருநாளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்து இருக்கிறார் மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் மீனா அன்பு நிதி உலகின் தொன்மையான நகரங்களில் ஒன்றாகப் போற்றப்படும் மாமதுரை, வரலாற்று சிறப்பு, கலாச்சார வளம், கோயில்கள், உணவு மரபு மற்றும் மத நல்லிணக்கம் ஆகிய அனைத்தையும் தன்னகத்தே தாங்கி நிற்கும் பெருமைமிகு மாநகரமாக திகழ்கிறது. “மல்லிகை மணக்கும் மதுரை”, “கோயில் நகரம்”, “உணவு நகரம்”, “வரலாற்று நகரம்” எனப் பல்வேறு சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் இந்த மாமாநகரம், பல மதங்களைப் பின்பற்றும் மக்கள் சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்து வாழும் உலகின் அரிய நகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

மதுரை மாநகரில் இந்து, இஸ்லாமியர், கிறிஸ்துவர் உள்ளிட்ட பல மதங்களைச் சேர்ந்த மக்கள், உறவினர்களைப் போல மாமன்மச்சான் உறவுடன் வாழ்ந்து வருவது இந்நகரின் தனிச்சிறப்பு. மத விழாக்கள், திருவிழாக்கள், சமூக நிகழ்வுகள் என எதுவாக இருந்தாலும், மத வேறுபாடு பார்க்காமல் அனைவரும் கலந்து கொள்வது மதுரையின் பாரம்பரியமாக இருந்து வருகிறது.

குறிப்பாக உலகப் புகழ் பெற்ற சித்திரை திருவிழா காலத்தில், அழகர் ஆற்றில் இறங்கும் வைபவத்தை காண பல லட்சம் பக்தர்கள் மதுரைக்கு வருகை தருகின்றனர். அந்நேரத்தில் வழிநெடுகிலும் இஸ்லாமியரும் கிறிஸ்துவர்களும் முகாமிட்டு உணவு, தண்ணீர், நீர்மோர் மற்றும் பானங்கள் வழங்கி பக்தர்களை வரவேற்பது, மத நல்லிணக்கத்தின் உயிர்ப்புடன் இருக்கும் சான்றாகும்.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற பல நிகழ்வுகள் மதுரையின் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளன. மீனாட்சி அம்மன் சித்திரை திருவிழாவில் அம்மனுக்கு போத்திய சால்வைகளை வழங்கிய இஸ்லாமியர்களுக்கு இந்துக்கள் கௌரவம் செய்தது, திருப்பரங்குன்றம் சிக்கந்தர் பாதுஷா சந்தனக் கூடு விழாவில் இந்துக்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தியது, தெற்கு வாசல் கிறிஸ்தவ பேராலயத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் அனைத்து மதத்தினரும் ஒன்றிணைந்து கொண்டாடியது போன்ற நிகழ்வுகள், மதுரை மக்களின் சகோதரத்துவத்தை உலகிற்கு வெளிப்படுத்தியவை.

இந்நிலையில், இஸ்லாமியர்களின் புனித ரமலான் நோன்பு மாதம் நடைபெற்று வரும் காலத்திலும் மதுரையின் நல்லிணக்க மரபு தொடர்ந்து வருகிறது. பள்ளிவாசல்களில் தயாரிக்கப்படும் நோன்பு கஞ்சி அனைத்து மதத்தினராலும் பெற்றுச் சாப்பிடப் படுவதோடு, நோன்பு திறக்கும் நிகழ்வுகளில் மற்ற மத சகோதரர்களும் கலந்து கொண்டு ஒற்றுமையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த நல்லிணக்க மரபை மேலும் வலுப்படுத்தும் வகையில், அரசு வழக்கறிஞர் அன்புநிதி & மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் மீனா அன்புநிதி குடும்பத்தினர் கடந்த ஐந்து ஆண்டுகளாக தங்களது சொந்த செலவில் இஸ்லாமிய பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நோன்பு திறக்கும் நிகழ்வை நடத்தி வருகின்றனர். ஆண்டுதோறும் நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய பெண்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வு, மத நல்லிணக்கத்தை நிலை நிறுத்தும் மனிதநேயச் செயலாக மதுரை மக்களிடையே பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.

ஒரு இந்து கோவில் அறங்காவலர் குழு உறுப்பினராக இருந்தபோதும், அனைத்து மதத்தினரிடமும் சமத்துவமும் சகோதரத்துவமும் நிலைநிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தொடர்ந்து இந்நிகழ்வை நடத்தி வருவது சமூக வலைதளங்களிலும் பொதுமக்கள் மத்தியிலும் கவனத்தை ஈர்த்துள்ளது.

கொரோனா பேரிடர் காலத்தில் இவர்கள் செய்த அறப்பணிகள் மிக முக்கியமானது ஆகும்!

சமண மதம் சைவத்தில் கலந்து, பின்னாளில் சைவ வைணவ மரபுகளுடன் மதங்களை கடந்து மனித மனங்களை இணைந்து வளர்ந்த வரலாற்று மண் மதுரை. அதேபோல், ரமலான் காலத்தில் இந்துக்கள் இஸ்லாமியர்களுக்கு உதவுவது, சித்திரைதிருவிழாவில் இஸ்லாமிய தர்காக்கள் சார்பில் இந்து பக்தர்களுக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்குவது, கிறிஸ்துமஸ் விழாவில் அனைத்து மதத்தினரும் கலந்து கொள்வது போன்ற நல்லிணக்க மரபுகள் காலம் காலமாக தொடர்ந்து வருகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து ரமலான் நோன்பு கால உதவி நிகழ்வுகள் நடைபெற்று வருவது, மதுரையில் மத நல்லிணக்கம் வாழ்வியல் முறையாக இருப்பதற்கான மேலும் ஒரு சான்றாகும்.

மத வேறுபாடுகளை விட மனிதநேயம் மேலானது என்பதை நடைமுறையில் காட்டும் நகரம் மதுரை. பல நூற்றாண்டு களாக மத நல்லிணக்கத்தை காக்கும் இந்த மாமாநகரம், உலகமே போற்றும் ஒற்றுமையின் எடுத்துக்காட்டாக இன்று வரை திகழ்ந்து வருகிறது. மதங்களை இணைப்புகள் நடந்த மதுரையில் , மனித மனங்கள் இணைந்து மத நல்லிணக்கத்தை தொடர்ந்து காக்கும் மாநகர் - மாமதுரை.

இவ்வாறு அவர் பேசினார்.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பெருமாள் மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் செல்வக்குமார் ஆகியோரின் ஏற்பாட்டில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட லா.கூடலூர் ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க. ஒன்றிய வர்த்தக அணி நிர்வாகி கோ.சசிகுமார் (எ)பாபு,அதிமுக மாவட்ட வழக்கறிஞர் அணி இணை செயலாளர் அருள்தாசன், அ.தி.மு.க. மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற இணை செயலாளர் பி.வைத்தியலிங்கம், கீழத்தேனூர் அ.தி.மு.க. கிளை செயலாளர் ஏழுமலை ஆகியோர்கள் தங்களது ஆதரவாளர்கள் 500க்கும் மேற்பட்டோருடன் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவருக்கும் மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., கழக இரு வண்ண வேஷ்டிகள் மற்றும் புடவைகளை அணிவித்து, தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்,நிகழ்வில் தொகுதி பொறுப்பாளர் ச.அ.பெருநற் கிள்ளி உடன் கலந்து கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.ஏ.துரைசாமி

**மார்ச் 4 (1978)**



நாகை நகர செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

மிசா காலத்தில் நாகை நகரமே வியக்கத்தக்க வகையில் “அண்ணா சிலை” அமைத்து தலைவர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் திறக்கச் செய்தவர்.

நாகை வீட்டு வசதி சங்கத் தலைவராகவும், நீலாயதாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**